## சேந்தமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர்/செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திருமதி.ச.உமா.,

ந.க.எண்: 01/2024

நாள்27.01.2024.

பொருள் : திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம் – சேந்தமங்கலம் ஊராட்சி மற்றும் கிராமம் புல எணகள் 268/B/3B & 268B/4 – 1.81.50 acre (or) 7350.00 ச.மீ (அ) 79115 ச.அடி பரப்பளவு கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்க்கு ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1.திரு.டி.கிருஷ்ணகுமார் No.34 பாண்டி மெயின்ரோடு , ரெட்டிச்சாவடி கடலூர்–607402 என்பவரது விண்ணப்பம்.

2.நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் ந.க.எண்|BA8T972X5268/2022?2023/TCP நாள்: 09.08.2023.

3 சேந்தமங்கலம் ஊராட்சி மன்ற தீர்மான எண்.54 நாள்.14.9.2023

––0–––

உத்தரவு:

பார்வை 2–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் நடவடிக்கை மூலம் கள்ளக்குறிச்சி மாவட்டம் திருநாவலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சேந்தமங்கலம் ஊராட்சி மற்றும் கிராமம் புல எணகள் 268/B/3B & 268B/4 – 1.81.50 acre (or) 7350.00 ச.மீ (அ) 79115 ச.அடி பரப்பளவு கொண்ட மனைபிரிவிற்க்கு ம.வ/ந.ஊ.உ.இ(க.ம) எண்.058/2023 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

## மனைப்பிரிவின் ஒதுக்கீடுவிவரம்

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தபரப்பளவு | – | 1.81.50 acre (or) 7350.00 ச.மீ (அ) 79115 ச.அடி |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | – | 50 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | – | – |
| ஒதுக்கிய மனைகள் | – | 43 |
| மனைகளின் மொத்த பரப்பளவு | – | 7350.00 ச.மீ (அ) 79115 ச.அடி |
| திறந்த வெளி ஒதுக்கீடு.(OSR) இடத்தின் பரப்பு(சாலையின் பரப்பளவு மற்றும் மூலை முடுக்குகளின் பரப்பு) | | 1983.78 ச.மீ (26.99%) |
| உள்ளாட்சிக்காக ஒப்படைக்க வேண்டிய பொது ஒதுக்கீட்டின் பரப்பளவு. | | 30.00 ச.மீ (0.56%) |
| தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்க்கான ஒதுக்கீட்டின் பரப்பளவு. | | 34.50 ச.மீ.(0.64%) |
| மனைப்பிரிவு சாலை போக மீதமுள்ள பரப்பு | – | 5366.22 ச.மீ |
| அனுமதி வழங்கப்படும் மொத்த மனைகளின் எண்ணிக்கை | – | 1 முதல் 43 ( வரைபடத்தில் உள்ளபடி) |

இதில் பொது உபயோகம் TNCD & BR 2019 விதி எண் 47(8) ன்படி உள்ளாட்சி மற்றும் TANGEDCO க்கு தானமாக ஒப்படைக்க வேண்டிய 1% ஒதுக்கீடு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் ஒதுக்கிய 43 மனைகளுக்கும் வளர்ச்சிக் கட்டணமாக (5366.00 ச.மீ) 113000/–ஐ, சேந்தமங்கலம் ஊராட்சி நிதி வங்கி கணக்கில் உரியவாறு செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 3–ல் கண்ட உத்தரவில் தெரிவிக்கப்பட்ட வாறு திறந்த வெளி ஒதுக்கீடு (OSR) ஒப்படைக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடுகளான உத்தேச சாலைகள் மற்றும் பூங்கா பகுதிகளை உள்ளாட்சியின் பெயரில் பெயரில் தான பத்திர ஆவண எண்: 1127/2023,நாள்: 04.05.2023 மற்றும் EB DOCUMENT NO 1126/2023 நாள்.04.05.2023 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 2—ல் காணும் நடவடிக்கைகளின் படி கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கப்பட்டதன் அடிப்படையிலும் பார்வை – 3ல் சேந்தமங்கலம் ஊராட்சி மன்ற தீர்மான எண்.54 நாள்.14.9.2023 ன்படியும் சேந்தமங்கலம் ஊராட்சி மற்றும் கிராமம் புல எணகள் 268/B/3B & 268B/4 – 1.81.50 acre (or) 7350.00 ச.மீ (அ) 79115 ச.அடி பரப்பளவு கொண்ட மனைபிரிவிற்க்கு இறுதி ஒப்புதல் அளித்து இதன் மூலம் அங்கீகரித்து உத்தரவிடப்படுகிறது. இறுதி ஒப்புதல் செய்து உத்தரவிட்டதைத் தொடர்ந்து பத்திர பதிவு செய்து விற்பனை செய்வதற்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது.

மேலும், மனைப்பிரிவில் விற்கப்படும் அனைத்து மனைகளிலும் உரிய சட்ட விதிகளின் படி சம்பந்தப்பட்ட ஊராட்சியின் உரிய அனுமதி பெற்ற பின் வீடுகள் கட்டப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

வரைபடத்தில் தெரிவிக்ப்பட்டுள்ள வ.எண் 06 உள்ள நிபந்தனையின் படி, சொத்து வாங்க விரும்பும் எந்த ஒரு நபரும் விண்ணபதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமைகுறித்து தனியே உறுதிபடுத்தி கொள்ள வேண்டும். நில உரிமம் குறித்து ஊராட்சிமன்றம் எந்த பொறுப்பும் ஏற்காது.இதனை பொருத்தமான நீதிமன்றத்தின் மூலம் தீர்த்து கொள்ள வேண்டும். ஊராட்சி அமைப்பு இதற்கு பொறுத்தமானது அல்ல என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல மற்றும் மெய்த்தன்மையற்றது என அறியப்பட்டால் (அ) இம்மனை பிரிவுக்கு வழங்கப்பட்ட அனுமதிக்கு ஊராட்சிக்கோ (அ) அரசுக்கோ பாதிப்பு ஏதேனும் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட வரன்முறை அனுமதி ஆணை எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

M. Umer

ஊராட்சி மன்ற தலைவர் / செயல் அலுவலர்.
சேந்தமங்கலம் ஊராட்சி.

பெறுதல்:

திரு.டி.கிருஷ்ணகுமார்
No.34பாண்டிமெயின்ரோடு
ரெட்டிச்சாவடி
கடலூர்—607402

நகல்: வட்டார வளாச்சி அலுவலர்(கி.ஊ)திருநாவலூர்.
நகல்: சார்பதிவாளர்,திருநாவலூர்.
நகல்: உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), கள்ளக்குறிச்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: உதவி இயக்குநர்(நகர் மற்றும் ஊரமைப்பு துறை), கள்ளக்குறிச்சி அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.